சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 10/2020

பெயர். திரு.சிவாஜி நாள் 27.01.2026
த/பெ. ராகவன்

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் ஓட்டி சென்ற ஆட்டோ எனக்கு சொந்தமானது தான். நான் 20 வருடங்களாக ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். அன்றைய தினம் ஆட்டோவில் என் மகள் உட்பட 2 பள்ளி செல்லும் குழந்தைகளும் பயணம் செய்தனர். பாலாறு பாலம் தாண்டியவுடன் வடபாதி செல்லும் இணைப்பு சாலை அருகே விபத்து ஏற்பட்டது. திண்டிவனம் – சென்னை சாலையில் மேற்கு நோக்கி வடபாதி சாலை இருக்கிறது என்றால் சரிதான். நான் செங்கல்பட்டில் இருந்து வடபாதியில் உள்ள என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். இருளர் மூலிகை பண்ணை அருகே மேற்கண்ட இரு நெடுஞ்சாலையை இணைக்கக்கூடிய சாலை சந்திப்பு அருகே விபத்து ஏற்பட்டது. நான் கூறும் டிராக்டர் வடபாதி கிராமத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து, தெற்கே திரும்பும் போது ஏற்பட்டது. டிராக்டரில் கரும்பு லோடு இருந்தது என்றால் சரிதான். அதனால் டிராக்டர் வேகமாக ஓட்ட முடியாது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன அறிக்கை பார்த்தால் தான் வாகனங்களுக்கு எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டது என தெரியவரும் என்றால் சரிதான். இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் ஆட்டோவிற்கு சேதம் ஏற்பட்டதற்காக நான் இழப்பீடு ஏதும் தனியாக கோரவில்லை. விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து தான் படாளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். எனக்கு குடிபழக்கம்

கிடையாது. என்னுடைய விபத்து பதிவேட்டில் நான் மதுவின் ஆளுமையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் கூறியுள்ளவாறு விபத்து ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மதுவின் ஆளுமையில் நான் வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி ஆட்டோவை கவிழ்த்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு தவறானது என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.